தினகரன் 29.06.2025

### காகிதபுரம் காகித ஆலை சார்பில்

# நடமாடும் இலவச மருத்துவ முகாம்

## 931 பேருக்கு பரிசோதனை




காகிதபுரம் தமிழ்நாடு தமிழ்நாடு காகிதஆலை சார்பில் பொதுமக்களின் இல்லம் தேடி நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

வேலாயுதம்பாளையம், ஜூன் 29: டிஎன்பிஎல் சார்பில் நடைபெற்ற நடமாடும் இலவச மருத்துவ முகாமில் 931 பேருக்கு மருத்துவ பரிசோதனை செய்து ஆலோசனை மற்றும் மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொது மக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சந்தீப் சக்சேனா அவர்களால் கடந்த பிப்ரவரி மாதம் 21ம் தேதி துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்முகாமானது பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் மற்றும் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கோயமுத்தூர் உடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம்,கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் 21.2.2025 முதல் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. 24.6.2025 அன்று 50வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதூருடன் நான்காம் மாத மருத்துவ முகாம் நிறைவு பெற்றது. மருத்துவ முகாமில் 931 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை சுமார் 3,914 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர் என்பதும்,இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**தினமலர் 02.07.2025**

# மருத்துவ முகாம்: 931 பேர் பயன்

**வேலாயுதம்பாளையம்:** புகழூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (டிஎன்பிஎல்) சமுதாய நலப்பணித் திட்டத்தில் மக்கள் நலன் பேண தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடத்துகிறது. மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய காகிதபுரம் டிஎன்பிஎல், கோவை ராயல் கேர் மருத்துவ மனை இணைந்து ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர், திருக்காடுதுறை ஆகிய ஊராட்சியில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் இலவச மருத்துவ முகாம் நடத்தி வருகிறது. முகாமை நிறுவன மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா பிப்ரவரியில் தொடங்கி வைத்தார். 50வது கிராமமான பொன்னி யாக்கவுண்டன் புதுாருடன் 4ம் மாத மருத்துவ முகாம் நிறைவு பெற்றது. 50வது முகாமில் 931 பேருக்கு மருத்துவ ஆலோசனை, மருந்து மாத்திரை காகித நிறுவனம் மூலம் இலவசமாக வழங்கப்பட்டது. மேற்கண்ட முகாம்கள் மூலம் 3ஆயிரத்து 914 மக்கள் பயன டைந்துள்ளனர்.

**தினத்தந்தி (01.07.2025)**




### புகழூர் காகித ஆலை சார்பில்

# தினசரி நடமாடும் மருத்துவ முகாம்

## 3,914 பேர் பயன் அடைந்தனர்

நொய்யல், ஜூலை.1-

புகழூர் காகித ஆலை மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் காகித ஆலை சுற்றியுள்ள 50 கிராமமக்கள் பயன்பெறும் வகையில் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் கடந்த பிப்ரவரி மாதம் 21-ந்தேதி தொடங்கப்பட்டது. இந்த 50-வது முகாம் கடந்த மாதம் 24-ந்தேதி பொன்னியாக்கவுண்டன்புதூருடன் நிறைவு பெற்றது. மருத்துவ முகாமில் 931 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகளும் காகித ஆலை சார்பில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை சுமார் 3,914 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

மாலை மலர் 28.06.2025




இலவச மருத்துவ முகாம் பொன்னியாக் கவுண்டனூரில் நடைபெற்ற போது எடுத்த படம்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்

# இல்வச மருத்துவ முகாம் மூலம் 931 பேருக்கு மருத்துவ உதவி

வேலாயுதம்பாளையம், ஜூன்.28—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொது மக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சந்தீப் சக்சேனா வால் கடந்த பிப்ரவரி மாதம் 21—ந் தேதி துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்முகாமானது பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மற்றும் கோயமுத்தூர்ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, உடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள பு பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது.

கடந்த 24.6.2025 ஆம் தேதியுடன் 50—வது கிராமமான பொன்னியாக் கவுண்டன்புதூருடன் 4—ஆம் மாத மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது. மேற்கண்ட மருத்துவ முகாமில் 931 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை சுமார் 3914 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது.

இந்து தமிழ் திசை 29.06.2025

# டிஎன்பிஎல் சார்பில் நடமாடும் மருத்துவ முகாம்

**திருச்சி**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டிஎன்பிஎல்) சமுதாய நலப் பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் நலனுக்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் பிப்.21-ம் தேதி தொடங்கப்பட்டது. இதை, காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சந்தீப் சக்சேனா தொடங்கிவைத்தார்.

கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 4 மாதங்கள் நடைபெற்ற இந்த முகாம் ஜூன் 24-ம் தேதி 50-வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதூரில் நிறைவடைந்தது. கடந்த 4 மாதங்கள் நடைபெற்ற மருத்துவ முகாம்கள் மூலம் மொத்தம் 3,914 பேர் பயனடைந்தனர் என காகித ஆலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் 29.06.2025

# நடமாடும் மருத்துவ முகாம் 3,914 பேருக்கு சிகிச்சை

**கரூர், ஜூன் 29**

புகளூர், டி.என்.பி.எல்., நிறுவனம் நடத்தும் மருத்துவ முகாமில், 3,914 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

புகளூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ், நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. காகித ஆலையை சுற்றியுள்ள கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடக்கிறது. 50வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதுாரில், மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது. இங்கு, 931 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இதுவரை, 3,914 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.